Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month
Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17
Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 20 ஜூன் 2015 கானம் : 11



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO NAME NO SELF INTEREST ONLY GOD

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 20 ஜூன் 2015 கானம் :11

Delivered by India Post www.indiapost.gov.in



மே 8 - 17 - மதுரபுரி ஆஸ்ரமத்தில் வசந்தோத்ஸவம்







நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தில் உயிர் நீத்தோருக்காக மலேசிய நாமத்வாரில் மே 9 அன்று ப்ரார்த்தனை, அஞ்சலி








ஏப்ரல் – மே – அமெரிக்காவில் சத்சங்கங்கள், பூர்ணிமாஜி



அமெரிக்காவில் கோபகுடீரம்











ஏப்ரல் 29 வாலாஜாபேட்டை பெருமாள் கோவிலில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



மத்திய கிழக்காசிய நாடுகளில் சத்சங்கம் – ராமானுஜம்ஜி




## G.O.D இந்தியா டிரஸ்ட் ஐந்தாம் ஆண்டு விழா விருதுநகர் மே 1,2

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 ஜூன் 2015 கானம்: 11

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-231 | 05 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 09 |
| பாகவத பழம்- ஸ்க 2/25 | 10 |
| அபிநவ சுகர் | 14 |
| G.O.D இந்தியா டிரஸ்ட் ஆண்டுவிழா | 16 |
| குரு வழிபாடு | 18 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| சனாதன கோஸ்வாமி | 26 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 28 |
| சத்சங்க செய்திகள் | 30 |
| ப்ருந்தாவன கண்ணன் | 33 |
| மாலே மணிவண்ணா | 36 |


*யாராவது வேங்குழலை ஊதினால், மான் தானாக அவ்விடத்துக்கு வந்து சேரும்; கானத்தைக் கேட்டு மகிழும். அதுபோல, யாராவது பகவானுடைய குணங்களைப் பாடினால், நாமாகப் போய்க் கேட்டு, ஆனந்திக்க வேண்டும்.*

*- ஸ்ரீமத் பாகவதம்*

நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தில் பாதிக்கப்பட்டோருக்காக மலேசிய நாமத்வார் சார்பாக நடைபெற்ற பிரார்த்தனை கூட்டம் - 9.5.2015 மாலை 7மணி - நீத்தவர்களுக்காக மலர்ச்செடிகள் நடப்பட்டன. அந்த நிகழ்ச்சிக்காக

## *குருநாதர் மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளிய பிரார்த்தனை*

---

*நிலமகளே! உன் மடியில் நாங்கள் பிறந்தோம். நீ கொடுத்த நீர் குடித்து உயிர் வளர்த்தோம். நீ கொடுத்த காய், கனிகள் உண்டு உடல் வளர்த்தோம். உன்னிடத்தில் ஓடி, ஆடி மகிழ்ந்தோம். உன் மடியில் நிம்மதியாக தலை சாய்த்து உறங்கினோம்.*

*பொறுமையே வடிவான உந்தனுக்கு என்ன ஆயிற்று? நேபாளத்தில் சீற்றம் கொண்டு நடுநடுங்கினாயே? எங்கள் சுற்றங்களை எல்லாம் கபளீகரம் செய்து கொண்டாயே?*

*பொறுமைக்கு இலக்கணமாய் இதுநாள் வரை திகழ்ந்தாய். பொறுமையை நாங்கள் உனக்கு போதிக்கும்படியான நிலை வந்து விட்டதே!*

*உன்னுள் வாங்கிய எங்கள் சுற்றங்களை எல்லாம் உன்னுடைய கணவரான வாசுதேவனுடைய சரணங்களிலே சேர்த்து அவர்களுக்கு நிரந்தர அமைதியை நல்குவாயாக..!*

*இனி எப்பொழுதும் இத்தகைய கோபம் உனக்கு எங்கள் மீதும், எங்கள் சுற்றத்தினர் மீதும் வர வேண்டாம் என்று அடிபணிந்து மன்றாடி கேட்டுக்கொள்கின்றோம்.*

*நீத்தவர்களுக்கு அஞ்சலியாக மலர்ச்செடிகளை நாங்கள் உன்னிடத்தில் நடுகின்றோம்!*

*ஏற்றுக்கொண்டு எங்களை வாழ்விப்பாயாக...!*

# மதுரமான மஹனீயர் – 230

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

மனித பிறவி எடுத்த ஒருவர், பகவானின் அருள் பெற்று, பிறவிப்பயனுற வேண்டும் எனும் பெரும் கருணையினால்தான், பல மஹான்கள் பல மார்க்கங்களை அருளி இருக்கிறார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் உபதேசித்து வரும் நாமகீர்த்தனமோ சாஸ்திர சம்மதமானது; புராணங்களில் மேன்மையாக பேசப்படுவது. சகல மார்க்கத்தினராலும் ஏற்று கொள்ளப்படுவது. இதை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், எண்ணற்ற அருளுரைகளில் சொல்லி இருக்கிறார்கள் அல்லவா! மேலும், இதில் ஆபத்தும், சிரமமும் கொஞ்சமும் இல்லை; அனைவராலும் பின்பற்ற கூடியது என்றும் சொல்வார்கள். மேலும் சிறப்பான ஒரு அம்சம் என்னவெனில், இதை பின்பற்றுவதால், மனித பிறவி மட்டுமல்லாமல், பிற உயிரினங்களையும் அது உய்வித்து, நன்மை தந்து விடும். அதையே, இங்கு நாம் பார்க்க போகிறோம்.

விருதுநகர் கருப்பசாமி நகரில் வசிப்பவர் திருமதி. கவிதாபீம்ராஜ் ஆவார். இவர் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய பள்ளியில், ஓவிய ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் ஒரு யோகா பயிற்சியாளரும் கூட. இவர் கடந்த ஏப்ரல் **2015**இல் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் விருதுநகர் சென்றிருந்த பொழுது, அனைவரின் முன்பாக, தமக்கேற்பட்ட ஒரு அருமையான அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

அவர் நாய் ஒன்றிற்கு உணவு அளித்து, இடம் கொடுத்து வளர்த்து வந்தார். தினமும், அது அவர் அளிக்கும் உணவை சாப்பிட தவறாமல் வரும். நாய்க்கே உரிய நன்றி உணர்வுடன் இருக்கும். ஒருசமயம், அது சில நாட்கள் தொடர்ந்து வராமல் இருந்தது. கொஞ்ச காலம் கழித்து, மறுபடி திடீரென வர ஆரம்பித்தது. அப்பொழுது, அந்நாயின் உடலில் இருந்த முடிகளெல்லாம் கொட்டி இருந்தன. சில நாட்களில்,

முடி எல்லாம், மொத்தமாக கொட்டி விட்டது. அது சீத, உஷ்ணங்களை எல்லாம் எப்படி சமாளித்ததோ தெரியாது. உடம்பை பார்த்தால், வியாதி வந்தாற் போல் இருந்தது. அதை பார்க்க கவிதாவிற்கு, கஷ்டமாகவும் வேதனையாகவும் இருந்தது.

அதற்கு ஏதாவது கொடுக்கையில், இப்பொழுது மனதில் ஒரு நெருடல்; அதை அருகே வர அனுமதிப்பதா? அது கெடுதலாகாதா? என்றெல்லாம் தோன்றியது. அதே சமயத்தில், நம் வீட்டில் ஒரு உறவினர் இப்படி ஆகி விட்டால் என்ன செய்வோம்? வியாதியை பாராட்டாமல், எப்பொழுதும் போல் இருக்க முயல்வோம் அல்லவா? மேலும் நமக்கு இப்படி ஒரு கஷ்டம் வந்தால், என்ன செய்வது? என்றெல்லாம் நினைத்தார். நல்ல உள்ளம் அவருக்கு.

அந்த நாயை, நல்ல மருத்துவர்களிடம் காண்பித்தனர். அதை பரிசோதித்த மருத்துவர்களோ, கை விரித்து விட்டனர். இதற்கொன்றும் செய்ய முடியாதென்றும், அதன் விதி அவ்வளவுதான் என்றும் விட்டு விட்டனர். கவிதாவாலும் ஒன்றும் செய்ய முடியாது வருந்தினார்.

ஆனால் அந்த நாய்க்கு, இப்பொழுது ஒரு வித்யாசமான பழக்கம் வந்திருந்தது. கவிதா தினமும் மஹாமந்திர கீர்த்தனமும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களான மதுர கீத பாடல்களையும் ஒலித்தட்டில் போட்டு கேட்பார். அவர் மதியம் வேலை முடிந்து வந்தால், முதலில் இதைத்தான் செய்வார். அதை கேட்டுக்கொண்டே வேலை செய்வது, அவர் வழக்கமாக இருந்தது. ஆச்சரியமாக அந்த நாயும், சரியாக கவிதா திரும்பி வரும்பொழுதெல்லாம் வர ஆரம்பித்தது; மஹாமந்திரமும், மதுரகீதமும் ஒலிக்கும் வரை, அதை கேட்பது போல், ஒலி வரும் திசையில் கண் வைத்து, காதை காட்டி கேட்டவாறு இருக்கும். கீர்த்தனம் முடிந்தவுடன், அது எங்கோ சென்று விடும். இது ஓரிரு நாள் என்றில்லாமல், தினமும் நடந்து கொண்டிருந்தது. கவிதாவுக்கே ஆச்சரியம். ஆனால், நாயை ஒன்றும் சொல்ல மாட்டார். நாய் தன் கடைசி காலத்தில் நிம்மதியாக இருக்க வேண்டுமே என நினைப்பார்.

நாய்க்கு கொஞ்ச நாளில் என்ன ஆயிற்று என்றால், அதன் வியாதி, கொஞ்சம் கொஞ்சமாய் குணமாவது தெரிந்தது. கொஞ்சம் முடி முளைக்க ஆரம்பித்தது. ஒருசமயம், திடீரென விரைவாக அந்த நாய் முன்போல் ஆரோக்யமாய் ஆனது. பழையபடியே ஆகி விட்டது!!! அதை பார்க்கையில், "ஆஹா! பறவை, விலங்கினம், புல், பூண்டு ஒன்றின்றியே .. நன்மை அருளும் மஹாமந்திரம்" என குருநாதர் சொல்லி இருப்பது, தமக்கு ஞாபகத்திற்கு வந்தது என மிக நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார் கவிதா. நமக்குமே இதை கேட்டால் மனதிற்கு மிக இதமாக இருக்கிறதல்லவா!

கவிதா பேசுகையில், மேலும் அழகாக ஒரு சம்பவத்தை சொன்னார். அவர், தினம் பள்ளியில் **Attendance** எடுக்கையில், "துக்காராம்" என்றொரு மாணவனின் பெயர் வரும். அதை சொல்கையில் எல்லாம், என்ன இது கேட்டிராத பெயராக இருக்கிறதே? துக்க மயமான பெயரா? என்ன இப்படி பெயர் வைத்திருக்கிறார்கள் என்றே அவருக்கு தோன்றுமாம். மனதிற்குள் சிரிப்பு தோன்றும். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசங்களை கேட்ட பின்னரே, "ஆஹா! துக்காராம் என்பவர் எப்பேர்ப்பட்ட மஹான்; பாண்டுரங்கனையே நேரில் பார்த்து பேசினவரல்லவா" என தெரிந்து வியந்தாராம்.

மேலும், "ராமனாகவும் கிருஷ்ணனாகவும் வந்த பகவானை பற்றி, வால்மீகியும் வியாசரும் இல்லை எனில், யாருக்கும் தெரிந்திருக்காது என ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே பன்முறை சொல்லி இருக்கிறார்கள். அதுபோல, தம் போன்றோருக்கு, மஹாமந்திரம் பற்றியோ மஹான்களை பற்றியோ, அவர்களின் உபதேசங்களை பற்றியோ, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் இல்லை எனில், கொஞ்சமும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை" என்றார்.

அது மட்டுமின்றி, "பல மஹான்களின் சரித்திரம், அவர்களின் உபதேசம், ராமாயணம், பாரதம், பாகவதம், நாமப்ரபாவம் என எல்லாவற்றையும் கொஞ்சமும் சிரமமின்றி அனைவரும் சுவையான ரஸமாக எளிதில் அருந்தும்படி,

**ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசங்கள் இருக்கின்றது அல்லவா" என்றார்.**

**ஸ்பரிசவேதி என்றொரு கல் உண்டு. அதைக் கொண்டு எந்த இரும்பை தொட்டாலும், இரும்பு தங்கமாகி விடும். அதுபோல ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஒவ்வொருவர் வாழ்விலும் எப்படியோ திடீரென வந்தார். அருமையாக, அனைவரையும் நாமம் சொல்பவர்களாய் மாற்றி, ஏராளமான நற்பலன்களை அநாயசமாக பெறுமாறு செய்து விட்டாரே! சராசரியாக வாழ்பவர்களையும் கூட, மிக நல்ல விதத்தில் ஆன்மீகத்தில் உயர்த்தி இருக்கிறாரே என தோன்றியது. இதை மனதில் கொண்டு, அவரவர் வாழ்க்கையை, ஒருகணம் திரும்பி பார்த்தால், வியப்பு மேலிடுகிறது அல்லவா!**

## மதுரமுரளி வருட சந்தா


தாங்கள் இருபது வருடங்களாக, மதுரமுரளிக்கு அளித்து வரும் பேராதரவிற்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி. நமது இதழ் பொலிவு பெற்று 21ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்க இருக்கின்றது.

அச்சு செலவு, காகித செலவு, தபால் செலவு இவை கடந்த பத்து வருடங்களில் பன்மடங்காக உயர்ந்த காரணத்தினால், மதுரமுரளி தனிப்பிரதியின் விலையை, ரூ**15**க்கு உயர்த்த வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது.

இந்த விலை உயர்வை பொருட்படுத்தாமல், மதுரமுரளியின் வளர்ச்சிக்காக, தாங்கள் **2015-16**ஆம் ஆண்டுக்கான வருட சந்தா ரூ**180**ஐ உடனே செலுத்தும்படி கேட்டுக் கொள்கின்றோம். அங்ஙனமே **15**வருடங்களுக்கு முன் ஆயுள் சந்தாதாரராக ஆனவர்கள், விருப்பமிருந்தால், மறுபடி பிரதி வருட சந்தாதாரராக ஆகலாம் என தெரிவித்து கொள்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு - **044-24895875** தொலைபேசியை தொடர்பு கொள்ளவும். மதுரமுரளியின் தெய்வீக பணி தொடர்ந்து நடைபெற உங்களின் ஆதரவை எதிர்நோக்கும் ...

ஆசிரியர் - மதுரமுரளி



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

**கேள்வி: தீவிரமாக காயத்ரி ஜபம் செய்த திரிவேணி ஸ்வாமிகளுக்கு, தேவி தரிசனம் கிடைத்த பொழுது, என்ன வரம் வேண்டும் என அவள் கேட்கிறாள். ஆனால், "தேவியிடம் வரம் எதுவும் கேட்காதே" என்று அவர் குரு ஞானானந்தர் சொன்னதாக படித்தேன். ஸ்ரீஞானானந்தர், "வரம் எதுவும் கேட்க வேண்டாம்" என ஏன் சொன்னார்?**

**பதில்: மனிதனாக பிறந்து, தவம் இயற்றுவது என்பதே, ஆத்ம சாக்ஷாத்காரம் அடைய வேண்டும் என்பதற்காகத்தான். கடுமையாக தவம் இயற்றி தேவதைகளை தரிசிக்கையில், வரம் ஏதாவது கேட்டு பெற்று விட்டால், செய்த தவத்திற்கு பலனாக அந்த வரம் இருக்குமே அன்றி, அந்த தவம் ஆத்ம சாக்ஷாத்காரத்திற்கு பயன்படாமல் போய் விடும்.**

**பின்னர், ஞானம் பெற, தவத்தை முதலிலிருந்து துவங்க வேண்டும். அதனால்தான், மந்திர சித்தி பெற்று தேவதைகளை தரிசித்தால், வரம் கேட்காமல், ஆத்ம ஞானம் ஒன்றையே லக்ஷியமாக கொள்ள வேண்டும். இதனாலேயே ஸ்ரீஞானானந்தர், தேவி தரிசனம் கிடைத்த பொழுதும், "வரம் கேட்க வேண்டாம்" என சொல்லி இருக்கிறார்.**

பின் அட்டை: ஏப்ரல் 25, 2015 செங்கல்பட்டு அருகே ஆத்தூரிலுள்ள சுக்ல யஜுர் வேத பாடசாலையில் வேத பரீக்ஷையில் தேர்வு பெற்ற வித்யார்த்திகளுக்கு சான்றிதழ் வழங்குதல் மற்றும் ஆண்டு விழா.





# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 8

-ஸ்ரீ ஸ்வாமிஜி (25)



### அத்யாயம் 8

தொடர்ந்து, பரீக்ஷித் 'காலம்' என்பதன் விஷயமாக சில கேள்விகளைக் கேட்கின்றார். ......சென்ற இதழ் தொடர்ச்சி

மஹாகல்பம், அவாந்தர கல்பம் இவைகளின் காலம் எவ்வளவு? நிகழ்(காலம்), வரும்(காலம்) என்ற சப்தங்களுடைய காலம் என்பது, எவ்விதம் அனுமானிக்கப்படுகிறது? ஸ்தூல தேஹத்துடன் சம்பந்தத்தையடையும் ஜீவன்களுக்கு, ஆயுள் எவ்விதம் கணக்கிடப்படுகிறது? காலத்தின் ஸ்தூல மற்றும் சூக்ஷ்மமான பிரவ்ருத்தி எப்படிப்பட்டது?

ஹே பிராம்மண சிரேஷ்டரே! கர்மாக்களால் அடையக்கூடிய ஸ்தானங்கள் எவ்வளவு? அவை எப்படிப்பட்டவை? எந்த கர்மத்தைச் செய்தால், எந்த லோகத்தை ஒருவன் அடைவான்? எந்த கர்மாக்களை எவ்விதம் அனுஷ்டிப்பதால், ஒருவன் தேவாதி தன்மைகளை அடைகின்றான்?

பூமி, பாதாளம், திக்குகள், ஆகாசம், கிரஹங்கள், நக்ஷத்திரங்கள், மலை, மேலும் நதி, கடல், தீவுகள் இவையெல்லாம் எப்படி தோன்றின? இவைகளில் வசிக்கும் பிராணிகளுடைய உற்பத்தியும், எப்படி ஏற்பட்டது? இந்த பிரம்மாண்டத்தின் உள் அளவு, வெளி அளவு என்ன? மஹான்களுடைய நடவடிக்கை எவ்விதமானது? நான்கு வர்ணங்கள் மற்றும் நான்கு ஆச்ரமங்களின், ஸ்வரூப நிர்ணயம் எப்படி செய்யப்படுகிறது? ஸ்ரீஹரியின் மிக ஆச்சர்யமான அவதார கதை எது? யுகங்கள் எவ்வளவு? ஒவ்வொரு யுகமும், எவ்வளவு காலம் நீடிக்கும்? ஒவ்வொரு யுகத்தின் தர்மம் என்ன? பொதுவாக எல்லா மனிதர்களும் (ஸ்திரீ, புருஷ, வர்ணாச்ரம பேதங்கள் இல்லாமல்) அனுஷ்டிக்க வேண்டிய தர்மம் எது? தங்கள் உழைப்பில் வாழும் விவசாயிகள், ராஜரிஷிகள், ஆபத்திலிருப்பவர்கள், இவர்களுடைய தர்மம் என்ன? பிரக்ருதி முதலிய தத்துவங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவைகளின்

ஸ்வரூபமென்ன? அந்த பகவானை ஆராதிக்கும் முறை என்ன? ஆத்மதரிசனத்திற்கு உதவும், அஷ்டாங்க யோகத்தின் முறைகள் என்ன? யோகேச்வரர்கள் செல்லக்கூடிய, அர்ச்சிராதி மார்க்கமாக கதி என்ன? யோகிகளுடைய லிங்க சரீரம், எப்படி நாசமடைகிறது? நான்கு வேதம், உபவேதங்கள், தர்மசாஸ்திரம், இதிஹாச புராணங்கள் இவை அனைத்தினுடையவும் ஸ்வரூபம் என்ன? எல்லா ப்ராணிகளும் எப்படி தோன்றி, நிலைத்து, பின் மறைகின்றன? வைதிககர்மா, ஸ்மார்த்தகர்மா, காம்யகர்மா இவைகளுடைய விதி என்ன? தர்மம், அர்த்தம் மற்றும் காமம் இவைகள் ஒன்றுக்கொன்று முரணில்லாமல் இருக்கும் விதியும் என்ன? மஹாபிரளயத்தில், பிரக்ருதியுடன் லயத்தை அடைந்த ஒரு ஜீவன், மீண்டும் ஒரு சரீரத்தை எப்படி அடைகின்றான்? பாஷாண்ட மதம் எப்படி தோன்றுகிறது? ஜீவனுடைய பந்தம், மோக்ஷம் என்று யாதொன்று கூறப்படுகிறதோ, அதன் உண்மையான பொருள் என்ன? இதைத் தாண்டி, ஒரு ஜீவன், தனது உண்மை ஸ்வரூபத்தை உணர்வது என்று, யாதொன்று கூறப்படுகிறதோ, அது என்ன? சுதந்திரனான பகவான், எவ்விதம் மாயையுடன் விளையாடுகிறார்? எவ்விடத்திலும் இருக்கும் அவர் இந்த மாயையை விட்டு, சாக்ஷிமாத்திரமாக எப்படி இருக்கிறார்?

ஹே மஹாமுனியே! தங்களைச் சரணடைந்து கேட்கும் எனக்கு, இவை அனைத்தையும், ஆதிமுதல் கிரமமாக, எப்படியுள்ளதோ, அப்படியே கூறும்படி பிரார்த்திக்கின்றேன். இதை தவிரவும், நான் கேட்காமல், எதையெல்லாம் விட்டிருப்பேனோ, அவற்றையும் கூறியருளுமாறு பிரார்த்திக்கின்றேன். பிரம்மதேவரைப் போல, தாங்களும் இவற்றை எல்லாம் நன்கு அறிந்தவர். மற்றவர்களோவெனில், அதன் தத்துவத்தை உண்மையாக அறிவதில்லை. முன்னோர்களால் செய்யப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக பின்பற்றுகிறார்கள். அதனால், தாங்கள் எல்லாவற்றையும் எனக்கு கூறி அருள வேண்டும். ஆஹாரமில்லாததால், என் பிராணன் போகாது. ஏனெனில், அச்சுதனின் சரிதாம்ருதத்தை, நான் பானம் செய்து கொண்டிருக்கிறேன். பிராம்மண சாபமின்றி, வேறு ஒரு காரணத்தாலும், எனது பிராணன் போகாது. பரீக்ஷித் ராஜாவால், சபையில், இவ்விதம், சத்யஸ்வரூபியான பகவானைப் பற்றி கேட்கப்பட்ட ஸ்ரீசுகர், மிகவும் மகிழ்ச்சியடைந்தார். (கனியும்)

# ஈசுவர உபாசனை

- காஞ்சி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது, அவ்வை வாக்கு. ஆலயம் என்றால் தேவாலயம். 'தேவன்' என்றால் மஹாதேவன் அல்லது மஹாவிஷ்ணு. தேவன் குடியிருக்கும் இடம், தேவாலயம்.

தேவாலயத்திற்கு தினம் சென்று, மஹாதேவனை தரிசித்து வர வேண்டும். சக்தி இருக்கும் வரை, முடிந்தவரை தினமும் தரிசித்து வா. முடியாவிட்டால், வீட்டிலிருந்தபடியே கோபுர தரிசனம் செய். அப்போது, உன்னை அறியாமலே கோவிலில் உள்ள மஹாதேவன், உன் இதயத்தில் குடி கொண்டு விடுவான். சந்தேகமா? அப்போது, கண்ணை மூடிக்கொண்டு பார்! இதயத்தில், மகாதேவன் உனக்கு தரிசனம் அளிப்பான்!

அப்படி, அந்த மஹாதேவனை தரிசனம் செய்வதால், என்ன கிடைக்கும்? அவன் யார்?

அவனுக்கு, ஈசுவரன் என்று வேறொரு பெயரும் உண்டு.

ஈசுவர: ஸர்வ பூதானாம் ஹ்ருதயே அர்ஜுன திஷ்டதி
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா

(பகவத் கீதை 18-61)

"ஹே அர்ஜுனா! உயிருள்ள ஜீவராசிகள் அத்தனை பேர்களுடைய இதயத்திலும், உட்கார்ந்து கொண்டிருக்கிறானே ஒருத்தன், அவன்தான் ஈஸ்வரன், நாராயணன். அவன் என்ன செய்கிறான்? அவரவர்களுடைய பாபம், புண்ணியத்திற்கு ஏற்றாற் போல, அவர்களை எல்லாம் ஆட்டிப்படைக்கிறான்" என்று பகவானே சொல்லுகிறார்.

அந்த ஈசுவரனை உபாசனை செய்வதால் என்ன பலன்? யார், எந்த வேலையை செய்தாலும், அந்த வேலைக்கு தகுந்தாற்போல கூலி உண்டு. நல்லது செய்தால், நல்ல பலன்.

கெடுதல் செய்யக்கூட வேண்டாம். பிறருக்கு, கெடுதல் நினைத்தாலே போதும்; கெடுதல் வந்து சேர்ந்து விடும். கெடுவான் கேடு நினைப்பான் என்றுதானே சொல்லி இருக்கிறது. அதனால், யாருக்கும் கெடுதல் செய்யக்கூடாது. கெடுதல் செய்தால், நமக்கு கஷ்டம் வரும். கஷ்டம் வராமலிருக்க, கெடுதல் செய்யக்கூடாது. நினைக்கக்கூட கூடாது.

நல்லது செய்தால், நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும். நல்லது நினைத்தால் மட்டும் போதாது. செய்ய வேண்டும். அப்போதுதான் நல்லது கிடைக்கும். நல்லது என்ன கிடைக்கும்? யாருக்கும் கஷ்டம் இல்லாமல், சந்தோஷத்தை தருவது எல்லாம் நல்லது. அதெல்லாம் கிடைக்கும். அப்படி எங்கே சொல்லி இருக்கிறது? ஈசுவர உபாசனை செய்தால், "உர்வாருகம்" என்ற வெள்ளரிப்பழம் போன்ற பலன் கிடைக்கும், என்கிறது வேதம். அது எப்படிப்பட்டது?

மற்ற எல்லாப்பழங்களும் பழுத்தால், காம்பிலிருந்து விடுபட்டு கீழே விழும். பதிதம்; அதாவது கீழே விழக்கூடியது. வெள்ளரிப்பழம் ஒன்றுதான் அபதிதம். கீழே விழாதது. பழம், இருந்த இடத்திலேயே இருக்கும். காம்பு, பழத்தை விட்டு விலகி போகும். மற்ற பழங்கள், காம்பை விட்டு விட்டு, கீழே விழும். பதிதம் ஆனவை. வெள்ளரிப்பழம் மட்டும் அபதிதம். பதிதம் ஆகாதது. பழத்தை விட்டு விட்டு, அதன் காம்புதான் விலகி செல்லும்.

அதுபோல, ஈசுவர உபாசனை செய்தால், பதிதன் ஆக மாட்டான். சறுக்கி விழ மாட்டான். பாப காரியம் செய்வது, கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே போய், பாபமே இல்லாமல் போய் விடும். பாபம் குறையக்குறைய, துக்கமும் குறையும். பாபமே இல்லாவிட்டால், துக்கமே இருக்காது. ஆனந்தம், அப்போது நிரம்பி வழியும். ஜீவ தசையிலேயே, இந்த முக்தி நிலையை அடைய முடியும். அதுதான், ஜீவன் முக்தி நிலை.

வேதத்தில், "உர்வாருக பலம்" ஒன்றுதான் சொல்லி இருக்கிறது. வேறு எந்த பழமும் சொல்லவில்லை.

# அபிநவ சுகர்

அபிநவ சுகர் என்று புகழ் பெற்ற, "தருவை" ஸ்ரீலக்ஷ்மி நாராயண சாஸ்திரிகளின் சரித்திரம் உன்னதமானது. தாமிரபரணி பாயும் திருநெல்வேலி ஜில்லாவில் "தருவை" என்றொரு கிராமம். இங்கு மஹனீயர்களான பல அந்தணர்கள் தார்மிகர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

அதில் ஏழு கிராமங்களுக்கு ஏகபோக அதிபதியாய் வாழ்ந்தவர், ஸ்ரீமான் வேங்கடேசய்யர் என்பவர். இவரது உன்னத குணங்களை விளக்க ஒரு சம்பவமே போதுமானது. அக்காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின்போது, ஒரு மாத காலம், பண்டிதர் முதல் பாமரர் வரை, அனைவருக்கும் அன்னதானம் செய்து, அவர்களது அன்பையும் ஆசியையும் பெற்றவர் இந்த மஹனீயர்.

இவரது புதல்வர்களில் நான்காவதாக தோன்றியவர் ஸ்ரீலக்ஷ்மி நாராயண சாஸ்திரிகள். ஒரு மார்கழி அமாவாசையில் **5.1.1867**இல் இவர் அவதரித்தார். இவர் சிறு வயதிலேயே தெய்வ பக்தியும், பூஜை போன்ற தெய்வ சம்பந்தமான விஷயங்களிலும் நாட்டம் கொண்டவராக இருந்தார். தக்க வயதில் ப்ரும்மோபதேசம் பெற்று சாஸ்திரம் பயின்றார். இளம் வயதிலேயே, இவர் இத்தகைய பக்தி செய்வதை கண்ட ஸ்ரீநாமதேவஸ்வாமி என்ற பெரியவர், இவருக்கு வலுவிலே வந்து பகவன்னாமோபதேசம் செய்து, ஸூத்ரானுக்ரஹமும் செய்தார். தக்க காலத்தில் உத்தம பத்னியை மணமுடித்து இல்லறத்தை துவக்கினார்.

இவரது சிறிய தந்தையான அனந்தநாம சேஷய்யர், இவருக்கு ஸ்ரீமத் பாகவதத்தை உபதேசித்து, அதை அவர் மாத்திரம் அனுபவிக்காமல், பிறருக்கும் ஊட்டும்படி செய்தார். இவர் யோகாப்யாசமும் மந்திர சாஸ்திரமும் அறிந்து, அதை பழகி வந்தார். இவரது இஷ்ட தெய்வம் கண்ணன். அனுக்ரஹம் பெருகுவதற்கு ஸ்ரீஆஞ்சநேயரையும் பூஜித்தார்.

எவ்வளவு கற்றிருந்தாலும், ப்ரவசன சக்தியென்பது தனி. இவரோ ஸ்ரீவ்யாசர் கருத்தை உணர்ந்த ஸ்ரீசுகரை போல், பாகவதத்தை அனுபவித்து தன்மயமாகி எடுத்துரைப்பார். எந்த ப்ரதியையும் ப்ரயோஜனத்தையும் எதிர்பார்க்கவே மாட்டார்.

இவர் கூறும் விதத்தில், அரிய விஷயங்களும், பசுமரத்தாணி போல கேட்பவர் ஹ்ருதயத்தில் பதியும். பண்டிதர், பாமரர், குழந்தை, பெரியோர் என எல்லோருக்கும் புரியும் வண்ணம், ஆழ்ந்த கருத்துக்களை கூட எளிதில் விளக்குவார்.

சரீர சிரமத்தை சிறிதும் லக்ஷியம் செய்யாமல், இரவும் பகலும் எங்கு எவர் கேட்டாலும், தட்டாது பகவத் சரிதத்தை பரிவுடன் போஷிப்பார். நாற்பதாவது வயதிலே, சப்தாஹ யக்ஞத்தை துவக்கி, 125சப்தாஹம் செய்வதாக சங்கல்பித்து, அதை செய்தும் முடித்தார்.

எங்கும் எம்பெருமான் உளன் என்று உணர்ந்த இப்பெரியார், சிறு குழந்தைகளிடம் கூட சிரித்த முகத்துடன் அன்போடு பேசுவார். சற்றும் அகங்காரமில்லாதவர். கோபம் என்றால் என்னவென்றே அறியார். சாந்தியே உரு! பரோபகாரமே உடல்! பக்தியே சரீரம்! ப்ரவசனமே ஆகாரம்! அன்பே ஆக்ருதி! பற்றற்ற தன்மையே விக்ரஹம்! சௌலப்யமே சரீரம்!

16.5.37 வைகாசி சுக்ல சப்தமி அன்று, உடலை உறவினர்களிடமும், மனதை கண்ணனிடமும், வாக்கை ஸ்ரீமத் பாகவதத்திலும் அர்ப்பணம் செய்தார். ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள பீஷ்ம ஸ்துதியை சொல்லிக்கொண்டே பீஷ்மர், "அந்தஸ்வாஸ உபாரமத்" என்று சொல்லியிருப்பது போல், நம் பெரியாரும் தன்னுடைய ஸ்வாசத்தை நிறுத்தி கொண்டு, தன்னிஷ்ட தெய்வமான கோபாலனுடன் கலந்தார். சப்தாஹத்திற்காகவே தோன்றிய இவர், நமது நாட்டில் கலியை கடந்த கர்மயோகியாக வாழ்ந்த பலருள் முக்கியமானவர்.

## சைதன்யகுடீரம் - கோவிந்தபுரம்

கோவிந்தபுரம் சைதன்யகுடீரத்தில் புருஷோத்தம மாதத்தை முன்னிட்டு, 17.6.2015 முதல் 16.7.2015 வரை, ஒரு மாதம் நமது ஸத்குருநாதர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களால், ப்ரவசனம் நடைபெறும். பாகவதோத்தமர்கள் அனைவரும், இதில் கலந்துகொண்டு, குருநாதரின் க்ருபைக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

# *G.O.D இந்தியா டிரஸ்ட் 5ஆம் ஆண்டு விழா*

மஹாமந்திர கீர்த்தனம் செய்து, உலக மக்கள் அனைவரும் அமைதியும் பேரின்பமும் பெற்று, உய்ய வேண்டும் எனும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளிச்சைப்படி, **GOD India Trust** ஸ்தாபனம், அன்பர்கள் துணையுடன், பல வழிகளில், தொண்டாற்றி வருவது அனைவரும் அறிந்ததே!

நாமத்வார் பிரார்த்தனை மையம் மூலமாகவும், மற்றும் **GOD** சத்சங்கங்கள் மூலமாகவும் செயல்படும், சத்சங்க அன்பர்கள், தம்தம் பகுதிகளில், மிக அழகாக பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவரும், வருடத்திற்கு ஒருமுறை ஒன்றுகூடினால், ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ள நல்லதோர் வாய்ப்பாக அமையும் என்ற ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைப்படி, மே தினத்தை ஒட்டி, GOD Annual Day கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வருடம் 5வது ஆண்டு விழா, விருதுநகரில் மே 1 மற்றும் 2ஆம் தேதிகளில் பெரிய காளியம்மன் மண்டபத்தில் நடைபெற்றது. நாட்டின் பலபகுதிகளிலிருந்தும், 250க்கும் மேலான நாமத்வார் மற்றும் சத்சங்க அன்பர்கள் கலந்து கொண்டனர்.

மே 1 ஆம் தேதி, GOD India Trustன் ஸ்தாபகர் திரு.சத்யநாராயணன் அனைவரையும் வரவேற்று, விழா ஏற்பாட்டினை செய்திருந்த விருதுநகர் அன்பர்களை அறிமுகப்படுத்தி துவக்கிவைத்தார். பிறகு விருதுநகர் அன்பர்களின் வரவேற்புரையுடன், விழா இனிதே துவங்கியது. பிறகு முரளிஜி, நமது சத்சங்க அன்பர்களை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி, தத்தம் பகுதியில் நடைபெறுகின்ற சத்சங்க விபரங்களை பகிருமாறு கேட்டுக்கொண்டார். அவ்வண்ணமே அன்பர்களும் மிக அழகாக எடுத்துரைத்தனர். அதன்பின், நமது குடியாத்தத்தை சேர்ந்த செல்வன்.லோகேஷ், "குரு மற்றும் நாம மகிமை" பற்றி சுமார் இருபது நிமிடங்கள் மிக அழகாக சொற்பொழிவு ஆற்றினார். தொடர்ந்து கடந்த வருட GODயின் செயல்பாடுகளை திரு.பாலாஜி ராமச்சந்திரன், தொகுத்து வழங்கினார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதல்படி, நடைபெற்று வரும் பிற ஸ்தாபனங்களின்

கடந்த வருடத்திய செயல்பாடுகளை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர், Dr.பாக்யநாதன்ஜி எடுத்துரைத்ததுடன், ஸ்தாபனங்களைப் பற்றிய சுவையான கேள்வி பதில் நிகழ்ச்சியினை நடத்தி, அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். பின், ராமானுஜம்ஜி இந்த விழாவிற்கான ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் செய்தியினை (Message) அனைவருக்கும் புரியும்வண்ணம் தெளிவாக எடுத்துரைத்தார்.

மதியம் பம்மல் திரு.பாலாஜி, தம் பிரச்சார அனுபவங்களை, சுவையாக பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து, முரளிஜி, நாமத்வார்களிலும் சத்சங்கங்களிலும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து பேசினார். மாலை விருதுநகர், சிவகாசி பகுதி கோபகுடீரக் குழந்தைகளின் பல்சுவை நிகழ்ச்சி நடைபெற்றது.

மறுநாள் 2ஆம் தேதி, குமாரி ஜனனி வாசுதேவன், GOD சார்பாக நடைபெற்று வரும் புரா-நவா, சம்ஸ்கிருதி, மதுரகீதம் மற்றும் உத்யோக்(Udhyog) ஆகிய நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்கினார். தொடர்ந்து திரு.சிவசுப்பிரமணியம், GOD Clean-up Dayவைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்கினார். பிறகு, திரு.குருமூர்த்தி வெங்கடேஸ்வரன் நாமத்வார்களில், தன்னார்வத் தொண்டர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளைப் பற்றி எடுத்துரைத்தார். இரண்டு நாட்களாக பகிர்ந்து கொண்ட விஷயங்களை, ராமானுஜம்ஜி மிகவும் தெளிவாக, அனைவருக்கும் புரியும் வண்ணம் தொகுத்து வழங்கினார்.

மதியம், திருமதி.சுதா தியாகராஜன் தமிழகம் முழுவதும் நடைபெற்று வரும், கோபகுடீர வகுப்புகளைப் பற்றி எடுத்து உரைத்தார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின், கீர்த்தனங்களை மையமாகக் கொண்ட, கலகலப்பான வினா விடை நிகழ்ச்சியினை, திரு.குருமூர்த்தி வெங்கடேஸ்வரன் நடத்தினார்.

நிகழ்ச்சிகள் செவ்வனே நடந்தேறிய பிறகு, ஏற்பாடுகளை மிக நன்றாக செய்த திரு.வெங்கடேசன் குடும்பத்தினர், திரு.காந்தீஸ்வரன் குடும்பத்தினர் மற்றும் விருதுநகர் சத்சங்க அன்பர்கள், GOD சார்பாக கௌரவிக்கப்பட்டனர்.

# குரு வழிபாடு

-ஸ்வாமி விவேகானந்தர்

குரு வழிபாடு என்பது, இந்து மதத்திற்கே உரிய ஒரு கோட்பாடு. இதுபற்றி ஸ்வாமி விவேகானந்தர் விளக்குகிறார். "அறிவை வளர்த்து கொள்வதற்கு, நாம் நூல்களிலிருந்து உதவி பெறலாம். ஆனால், ஆன்மீக வளர்ச்சிக்கு நூல்களிலிருந்து அநேகமாக ஒன்றுமே பெற முடியாது. நூல்களை படிக்கும்போது சில வேளைகளில் நம் ஆன்மீக வளர்ச்சிக்கு, ஏதோ உதவி கிடைப்பது போன்றதொரு மனமயக்கம் ஏற்படுகிறது. ஆராய்ந்து பார்த்தால், நம் அறிவுக்கு உதவி கிடைத்ததே தவிர, ஆன்மாவிற்கு அல்ல என்பது தெரிய வரும். அதனால்தான் கிட்டத்தட்ட நாம் எல்லோருமே, ஆன்மீக விஷயங்களை பற்றி வெகு அழகாக பேச முடிகிறது. நடைமுறை என்று வரும்போது, அதற்கு வேண்டிய தகுதி மிகவும் குறைந்தவர்களாக இருக்கிறோம். நமக்கு தேவைப்படும் தூண்டுதலை நூல்கள் தரமுடியாது என்பதுதான் இதற்கு காரணம். ஆன்ம வளர்ச்சிக்கு, அந்த தூண்டுதல் இன்னோர் ஆன்மாவிலிருந்துதான் வர வேண்டும். எந்த ஆன்மாவிலிருந்து, இந்த தூண்டுதல் வருகிறதோ அவரே குரு, ஆசிரியர். எந்த ஆன்மா தூண்டப்படுகிறதோ அவரே சீடன் அல்லது மாணவன்.

இவ்வாறு தூண்டுவதற்கு முதலாவதாக யார் தூண்டுகிறாரோ, அவரிடம் அதற்கான சக்தி இருக்க வேண்டும். ஆற்றலை தம்மிடமிருந்து மற்றொருவருக்கு பாய்ச்சும் சக்தியை அவர் பெற்றிருக்க வேண்டும். இரண்டாவதாக, பெறுபவரும் அதை பெறுவதற்கு தகுதியானவராக இருக்க வேண்டும். விதை உயிருள்ளதாக இருக்க வேண்டும். நிலமும் நன்கு உழப்பட்டு தயாராக இருக்க வேண்டும். இந்த இரண்டு நியதிகளும் நிறைவேறும்போது, அற்புதமான ஆன்மீக வளர்ச்சி ஏற்படுகிறது.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruvam Consulting Private Ltd**

# வீடு தேடி வருவான் விட்டலன் - 16

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

---

<u>ஸ்ரீஞானேஸ்வரர்-5</u>

ருக்மிணி தனது நிலையை விவரித்தாள். "நானும் என் கணவரும், மிகவும் சந்தோஷமாக குடும்பம் நடத்தி வந்தோம். எங்களிடையே, எந்த குறையும் இல்லை. எந்த சண்டையும் இல்லை. என்ன காரணமோ தெரியவில்லை; என் கணவர், குடும்பத்தை பிரிந்து சென்று விட்டார். எப்படி இருக்கிறார் என்று தெரியவில்லை. 12வருடங்கள், அப்படியே ஓடி விட்டது. பேச்சுவாக்கில், கேள்விப்பட்டது என்னவோ, அவர் சன்யாசம் வாங்கிக் கொண்டார் என்பதுதான். யாரோ ராமானந்த தீர்த்தர் எனும் மஹான், அவருக்கு காசி க்ஷேத்திரத்தில் சன்யாசம் கொடுத்தாராம்" என்றாள்.

இதைக் கேட்ட ராமானந்தருக்கு, தூக்கிவாரிப் போட்டது. ருக்மிணி சொல்வது, தன்னைத்தான் என்று அவருக்குத் தெரிந்தது. ருக்மிணிக்கு அது தெரியாது. "தான் சன்யாசம் கொடுத்தது யாருக்காக இருக்கும். 12 வருடங்கள் என்கிறாள். இந்த ஊரில் இருந்து வந்தவராக இருக்க வேண்டும்" என்றெல்லாம் தானும் தன் சீடர்களுடன் கலந்து ஆலோசித்தார் ராமானந்தர். இறுதியில், அது விட்டல்பந்த் என்று தெளிவானது.

"யாரை சொல்லுகிறாள் இந்த மாதுஸ்ரீ?"

"ஸ்வாமி! அந்த பெண்மணி குறிப்பிடும் காலத்தில், உங்களை பார்க்க இந்த இடத்திலிருந்து வந்தாரே, விட்டல்பந்த். தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?"

"ஆஹா! அவரை எனக்கு ஞாபகம் இருக்கிறது. தேஜஸ்வி ஆயிற்றே? அவரை திருமணம் ஆயிற்றா என நானும் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை. சிறந்த பக்குவி ஆயிற்றே அவர். ஆனால் அவராகத்தான் இருக்க வேண்டும். உடனடியாக அவரை வரச் சொல்".

அந்த காலத்தில், குதிரையில்தான் செய்தி சொல்லி அனுப்புவார்கள். ஒரு கடிதம் எழுதி, ஆபேவுக்கு சீக்கிரம் வரச்சொல்லி, குதிரை மூலம் ஆளை அனுப்பினார்கள். காசிக்கு சென்று, இந்த விவரத்தை தெரிவித்தவுடன், விட்டல்பந்த்தும்

வந்தார். மறுபடியும், தனது ஊருக்கு, சன்யாச கோலத்தில் வந்த விட்டல்பந்த், ராமானந்தரை நமஸ்கரிக்கையில், அருகில் ருக்மிணி இருப்பதை பார்த்தார்.

ராமானந்தர், விட்டல்பந்த்திடம், "இந்த பெண், உனது பூர்வாஸ்ரமத்தில், உனக்கு பத்னியாய் இருந்தவளா?" என்று கேட்டார்.

விட்டல்பந்த் : ஆமாம்.

ராமானந்தர் : என்னிடம், இதை நீ சொல்லவில்லை. இப்பொழுது ஒரு தர்மசங்கடம், உனக்கு ஏற்பட்டு இருக்கிறது. சாஸ்திரம் சொல்வதை கேட்பாயா, அல்லது, நான் சொன்ன வாக்கை காப்பாற்றுவாயா என்று, நீதான் சொல்ல வேண்டும். பிரம்மச்சாரி கிரஹஸ்தனாகலாம். கிரஹஸ்தன், வானப்ரஸ்தனாகலாம். வானப்ரஸ்தன் சன்யாசி ஆகலாம். ஆனால், சன்யாசி ஒருக்காலும், வானப்ரஸ்தனாகவோ, கிரஹஸ்தனாகவோ கூடாது. ஆஸ்ரமங்களில் மேலே செல்லலாம். கீழே செல்லக் கூடாது. இது சாஸ்திரம் விதிப்பது. நானோ, இந்த பெண்ணிற்கு குழந்தை பிறக்கும் என்று ஆசீர்வதித்து உள்ளேன். நீ, அவளுடன் சேர்ந்து, குடும்பம் நடத்தினால்தான் இது சாத்தியம். நீ, குருவான நான் சொல்வதை கேட்டு நடப்பாயா? அல்லது, "குரு வாக்கு என்னவானாலும் ஆகட்டும்; சாஸ்திரத்தை மீறுவதால், உண்டாகும் கொடிய பாபத்தை, சம்பாதிக்க மாட்டேன்" என்று இருக்க போகிறாயா?

விட்டல்பந்த் : குருநாதா! நான் கிரஹஸ்தனானால், எனக்கு கொடிய பாவமும், நரகமும் சம்பவிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அது நடந்தாலும் பரவாயில்லை. உங்கள் வாக்கு பொய்யாக கூடாது. அதனால், மறுபடியும் கிருஹஸ்தாஸ்ரமம் மேற்கொள்கிறேன்.

குருவின் வாக்கை மெய்ப்பிப்பதற்காக, விட்டல்பந்த் மறுபடி குடும்பம் நடத்தினார். ஒரு ஆச்சரியம். முதலில் பாண்டுரங்கன் திருமணம் செய்து வைத்தான். குழந்தை பிறக்கவில்லை. அதன்பின், சன்யாசம் மேற்கொண்டு, 12 வருடங்கள் கடுமையாக தவமும், குரு சேவையும் செய்தார். அதே சமயம் ருக்மிணியும் தவவாழ்க்கை மேற்கொண்டிருந்தாள். இப்பொழுது ....

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

3

- *ஜனனி*

அச்சமயம், ஒடியா ப்ரதேசத்திலிருந்து, படையெடுப்பு வேறு ஏற்பட்டு இருந்தது. இந்த ஆபத்து காலத்தில், தன்னை பாத்ஷா விடவே மாட்டான் என்று, சனாதனர் நன்கு உணர்ந்திருந்தார். அதனால், அவர், மன்னனுக்கு தனது உடல்நிலை சரியில்லாததால், அலுவலுக்கு வர இயலாது என்ற செய்தியை, சொல்லி அனுப்பினார்.

இதை கேட்ட மன்னன், ராஜ வைத்யரை சனாதனரிடம் அனுப்பினார். வைத்தியரோ, அவரது நாடியை சோதித்து விட்டு, "எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது; இது என்ன விசித்திர வியாதி" என்று வியந்தார். சனாதனர், சாதுக்களுடன் கூடி கதாசிரவணம் செய்து கொண்டிருப்பதையும், அவருக்கு உடலில் எந்த வியாதியும் இல்லை என்பதையும், அவருக்கு என்ன விசித்ர வியாதி என்று தன்னால் நிர்ணயிக்க முடியவில்லை என்றும், பாத்ஷாவிடம் கூறினார் வைத்யர். இதை கேட்டு திடுக்கிட்ட மன்னன், தானே நேராக, சனாதனரை காண சென்றான். அங்கு வைத்யர் கூறியது போலவே, சத்சங்கம் நடந்து கொண்டிருந்ததை கண்டதும், அவனது ரத்தம் கொதித்தெழுந்தது. "தங்கள் உடல் நலத்திற்கு என்ன குறைவு? தாங்கள் ஏன் அலுவலுக்கு வர மறுக்கின்றீர்கள்?" என்று தோரணையுடன், அவரை மிரட்டினான்.

"இது விசித்ர வியாதி. என் மனம், சற்றும் உலக விஷயங்களில் செல்லாது. அது ப்ருந்தாவனத்தை நோக்கி பறக்கின்றது" என்று, சற்றும் பயமில்லாமல், அவனிடம் கூறினார் சனாதனர். பலவிதமாக மிரட்டியும், பயமுறுத்தியும் பார்த்த பாத்ஷா, சனாதனர் எதற்கும் அசராமல், நிர்ப்பயமாய் இருப்பதை கண்டு, அவரை சிறையிலிட ஆணையிட்டான். சனாதனர் சிறையில் அடைக்கப்பட்டார். ரூபர், இவருக்கு ரகசியமாக, தான் சைதன்யரை தேடிச்சென்று கொண்டு போயிருப்பதாகவும், சிறையிலிருந்து வெளி வர, தான் ஒரு கடைக்காரனிடம் கொடுத்து வைத்திருக்கும், பத்தாயிரம் காசுகள் எவ்விதத்திலாவது உபயோகமாக இருந்தால், அதை உபயோகித்து கொள்ளுமாறும், செய்தி அனுப்பினார். சிறையில்

அல்லும் பகலும், உணவு உறக்கமின்றி, சைதன்ய விரஹத்திலேயே துடித்து கொண்டிருந்த சனாதனருக்கு, இந்த செய்தியை கேட்டதும், மேலும் விரஹம் உண்டாயிற்று. அந்த 10000காசுகளை வைத்துக்கொண்டு, எப்படியும் வெளியேறி விடுவது என்று முடிவு செய்தார்.

அப்பொழுதே, அவர் அந்த சிறையின் உயரதிகாரியிடம் பலவாறாக பேசி, தான் எந்த அபராதமும் செய்யவில்லை என்றும், பஜனை செய்ய எண்ணிய தன்னை பாத்ஷா அநியாயமாக சிறையிலிட்டிருப்பதையும், தன்னை எப்படியாவது தப்பிக்க விட்டால், உனக்கு புண்ணியம்தான் என்றும் பலவிதமாக பேசி பார்த்தார். சனாதனரை நன்கு அறிந்திருந்த போதிலும், அந்த உயரதிகாரிக்கு அவரை தப்பிக்க வைப்பதற்கு பயமாக இருந்தது. ராஜாவிற்கு தெரிந்தால், தலை போய் விடும் என்று, அவன் எண்ணினான். அப்பொழுது, சனாதனர் தான் ஒரு கடையில், பத்தாயிரம் காசு வைத்திருப்பதாகவும், அதை வரவழைத்து தருவதாகவும், அந்த அதிகாரியிடம் கூறினார். பணம் என்ற சொல்லை கேட்டவுடன், அந்த ஏழை அதிகாரியின் மனம் மாறியது. பிள்ளை குட்டிகளுடன் கூடிய அவன், மாதம் முப்பது ரூபாயை கூட முழுதாக பார்க்காத அவன், பத்தாயிரம் காசு என்றதும் மனம் மாறினான். "கங்கைக்கு ஸ்நானம் செய்ய சென்ற சனாதனர், நதியோடே போய் விட்டார்" என்று கூறும்படி, ராஜாவிடமிருந்து தப்பிக்க, அந்த அதிகாரிக்கு உபாயம் கூறினார் சனாதனர்.

ஒரு இரவு, எல்லாம் தயாராக இருந்தது. நடுநிசியில் அனைவரும் உறங்கி கொண்டிருந்த சமயம்; சனாதனர் மற்றும் ஈசானர் என்ற ஒரு நம்பகமான தொண்டன், இவர்களை அந்த அதிகாரியே, படகில் கங்கையின் அக்கரையில் கொண்டு விட்டு விட்டான். "தான், இனி கௌட தேசத்தின் அருகில் கூட வர மாட்டேன்" என்று, அந்த அதிகாரியிடம் நன்றி கூறி விடைபெற்றார் சனாதனர். ராஜமார்க்கத்தை விட்டு காட்டுப் பாதையில் சென்றார் சனாதனர். கௌர்-கௌர் என்று, ப்ரபுவின் நாமங்களை சொல்லிக்கொண்டே, காலில் கல்லும் முள்ளும் குத்துவது கூட தெரியாமல், வேக வேகமாக மேற்கு திசையை நோக்கி ப்ரபுவை காண வேண்டும் என்று ஓடினார். (தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை



## நிழல் வாழ்க்கை!

ஒரு மனிதன், வெகு நேரம் வெய்யிலில் நடந்து களைத்து இருந்தான். அப்பொழுது, அவன் தன்னை சுற்றி பார்த்தான். அவனது நிழல் மட்டும், அவனை சுற்றி இருந்தது. மணலில், அந்த நிழல் இருந்த இடத்தை எட்டி உதைத்தான். அது அப்படியே இருந்தது. சலித்து கொண்டே, மேலும் சிறிது நேரம் சென்று அப்பாடா என்று, ஒரு மரநிழலில் உட்கார்ந்தான்.

இப்பொழுது மறுபடியும் அவனை சுற்றி பார்த்தான். இப்பொழுதும் நிழல் அவனை போலவே, அவனருகே தோன்றியது. அதை பார்த்த அவனுக்கு, சுர் என்று கோபம் வந்தது. அந்த நிழலை, குழி தோண்டி, புதைத்து விடலாம் என்று முடிவு செய்தான். அதுபடியே, அங்கேயே ஒரு பெரிய குழி தோண்டினான். குழியின் அடியில் இறங்கி பார்த்தான். அதன் அடியில் இப்பொழுது நிழல் இருந்தது. அப்பாடா, இப்பொழுது இந்த குழியை மூடி விடுவோம் என்று முடிவு செய்த அவன், பெருமூச்சு விட்டவாறே குழியை மூடினான்.

குழியை மூடி விட்டு, தன்னை சுற்றி பார்த்தால், மறுபடியும் நிழல் மேலே தெரிந்தது. அம்மனிதனுக்கு ஒரே கவலையாய் போய் விட்டது. கைகளை மோவாய்கட்டையில் வைத்து கொண்டு, உட்கார்ந்து விட்டான்.

அப்பொழுது, ஒரு துறவி அந்த வழியாக நடந்து போனார். அவர் அவனை பார்த்து, "ஏனப்பா! ஏன் கவலையாக உட்கார்ந்திருக்கிறாய்" என்று கேள்வி கேட்டார். அவனும், "இதோ இந்த நிழலை குழி தோண்டி புதைத்தேன். மறுபடியும் குழியிலிருந்து வெளி வந்து, என்னை தொந்திரவு செய்கிறது" என்றான்.

அவர் உடனே சிரித்து கொண்டே, "ஏனப்பா! அதை எப்படி குழி தோண்டி புதைக்க முடியும்? அது உன் கூடவே எப்பொழுதும் இருக்கிறது" என்று சொல்லி அவனுக்கு விளக்கினார்.

அதை புரிந்து கொண்ட பிறகு, அம்மனிதன் சாந்தமானான்.

அது போலவே, "உலகம் ஒரு மாயை. அதில் செயலாற்றுவது தவறு" என்று பலர் சொல்வர். ஆனால் அந்த உலகம் எங்கிருக்கிறது என்று பார்த்தால், நினைவுகளான மனதிலேதானே இருக்கிறது! மனது என்பது இருக்கும் வரை, உலகம் என்பது ஒருவனை பாதிக்கத்தானே செய்யும்!

ஆக மனதை நன்கு விசாரித்து, அதை ஒருவன் அழித்தானே எனில், உலகத்தின் பாதிப்பிலிருந்து அவன் விடுபடுவான் அல்லவா!



**ஏப்ரல் 25** செங்கல்பட்டு அருகில் ஆத்தூர் கிராமத்தில் இயங்கி வரும் சுக்ல யஜுர்வேத பாடசாலையின் ஆண்டு விழாவில், வேதம் பயிலும் வித்யார்த்திகளின் தேர்வு சான்றிதழ்களை ஸ்ரீஸ்வாமிஜி வழங்கி அருளினார்கள்.

**ஏப்ரல் 29** வாலாஜாபேட்டை பெருமாள் கோவிலில் நடைபெற்ற மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள். திரளான அன்பர்கள் வந்திருந்து, குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**மே 8 - 17** -ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு மதுரபுரி ஆஸ்ரமத்தில் வசந்தோத்ஸவம் கொண்டாடப்பெற்றது. பத்து நாள் நடந்த இந்த உத்ஸவம் மே17 அன்று நிறைவானது. தினமும், ஸ்ரீப்ரேமிக வரதன் புஷ்ப அலங்காரத்தில் ஜொலித்தார். மாலை திவ்யமான கீர்த்தனங்கள் பாடப்பட்டன. தினமும் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

**நேபாள மக்களுக்காக ப்ரார்த்தனை** - மலேசிய நாமத்வார் அன்பர்கள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைப்படி, மே 9, 2015 மாலை 7மணி அளவில் ஒன்று கூடி, நேபாள பூகம்பத்தில் உயிர் நீத்தோருக்காக பிரார்த்தனை செய்தனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பூமித்தாய்க்கு எழுதிய ப்ரர்த்தனை ஒன்றும் அர்ப்பணிக்கப்பட்டது. சென்னையை சேர்ந்த ஸ்ரீமதி கிருத்திகா பரத்வாஜ், சங்கீத உபன்யாசம் செய்தார். சுனிதாஜி மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நிகழ்த்தினார். 80க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இதில் அன்பர்கள் உயிர் நீத்தோரின் நினைவாக மலர் செடிகளை நட்டு ஸ்ரீப்ரேமிகவரதனிடம் ப்ரார்த்தனை செய்தனர்.

**மத்திய கிழக்காசிய நாடுகளில் சத்சங்கங்கள்** - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் மே மாதத்தில் ராமானுஜம்ஜி பல சத்சங்கங்களை நிகழ்த்தினர். ராமானுஜம்ஜி பாகவத பாராயணமும், பாகவத உபன்யாசமும் நிகழ்த்தினார். அஸ்வின் பாகவதர் மிக அழகாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் "மதுரகீதம்" கீர்த்தனைகளை பாடினார். ராமானுஜம்ஜி, மேலும் பல சுயமுன்னேற்ற பயிற்சி வகுப்புகளையும் நிகழ்த்தினார்.

**ஏப்ரல் - மே அமெரிக்க சத்சங்கங்கள்** - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் தொடர்ந்து பூர்ணிமாஜி

சத்சங்கங்களை நிகழ்த்தி வருகிறார் .ஏப்ரல் 24, 25, 26 தேதிகளில் ஹூஸ்டன் நாமத்வாரில் பாகவதம் - நவயோகி உபாக்யானம் செய்தார். மே 1ஆம் தேதி கம்யூனிட்டி ஹாலில் வல்லபர் சரித்திரம் உபன்யாசம் செய்தார். மே 2 அன்று ஹூஸ்டன் கோபகுடீரம் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். மே 3 அன்று 120க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள துளசிதாசர் சரித்திரத்தை ராதாகிருஷ்ண மந்திரம் டெக்சாஸில் உபன்யாசம் செய்தார். மே 7,8,9 தேதிகளில் ஹூஸ்டன் நாமத்வாரில் வசந்தோத்ஸவம் - தீபோத்ஸவம், ஊஞ்சல் உத்ஸவம், புறப்பாடு, தெப்போத்ஸவம், ஜானவாசம், ராதாகல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. மூன்று நாட்களும் திரளான அன்பர்கள் வந்திருந்து குருவருளுக்கு பாத்திரமாகினர். மே 15இல் ரிஸ்மாண்ட் விர்ஜினியாவில் தியாகராஜர் சரித்திரத்தையும், மே 17இல் வாஷிங்டனில் துளசிதாசர் சரித்திரத்தையும், பூர்ணிமாஜி உபன்யாசம் செய்தார். மே 16 காலையில் விர்ஜினியாவிலும், மாலை வாஷிங்டனில் ஒரு பள்ளியில் பக்தி யோகம் குறித்தும் சத்சங்கம் நிகழ்த்தினார். அனைத்து இடங்களிலும் 75க்கும் குறையாமல் அன்பர்கள் வந்து சிரவணம் செய்தார்கள்.

**ஏப்ரல்** மற்றும் **மே** மாதத்தில் நாமத்வார் மற்றும் GOD சத்சங்கங்கள் இயங்கும் பல இடங்களில், பள்ளி மற்றும் பொது இடங்களில், நூற்றுக்கணக்கான சிறார்களுக்கு **கோபகுடீர பயிற்சி வகுப்புகள்** நடைபெற்றது. இதில் ராமாயண சுந்தரகாண்ட, பாகவத ஸ்லோகங்கள், ஸ்தோத்திரங்கள், குழந்தைகளுக்கான யோகா பயிற்சி வகுப்புகள், சமையல் கலை, நற்கதைகள், பாடல்கள், கைவினை பொருட்கள் செய்வது ஆகியவை குழந்தைகளுக்கு அனுபவஸ்தர்களால் கற்றுக் கொடுக்கப்பட்டன. சிறார்களுக்கு உணவும், சிறு உண்டிகளும் வழங்கப்பட்டது. பூர்த்தியில் சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்க, குழந்தைகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.



## சனாதனப்புதிர் பகுதி 74- <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. மஹாபாரதத்தில் மையமாக விளங்குவது எவை?
2. ஸ்காந்த புராணத்தில் மையமாக விளங்குவது எவை?
3. காசி காண்டத்தில் எத்தனை அத்தியாயங்கள்? எத்தனை ஸ்லோகங்கள்?
4. கங்கா ஸஹஸ்ர நாமத்தை யார் யாருக்கு சொல்லுகிறார்?
5. விநாயகரை பற்றிய அவதார குறிப்புகள், விஷயங்கள் எந்த புராணத்தில் காணப்படுகின்றன?
6. முதலாம் ராஜராஜனால் கங்காவிஜயம் முடிந்து, ஊர் திரும்பும்பொழுது கொண்டுவரப்பட்ட விநாயகர், எங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது?
7. சுவேத விநாயகர் எங்கு காணப்படுகிறார்?
8. விநாயகரின் அவதார விஷயங்கள் மற்ற எந்த புராணங்களில் காணப்படுகின்றன?
9. ப்ருகு, ஸ்யவனர், ப்ரமதி, ருரு இவர்களின் மனைவிகளின் பெயர் என்ன?
10. வாரணவதத்திற்கு புறப்படும் சமயம் விதுரர் தர்மபுத்திரருக்கு எத்தனை ஸ்லோகங்களில், யாருக்கும் புரியாத மொழியில் வரப்போகும் ஆபத்து, ஆபத்திலிருந்து தப்ப வழிகள் சொல்கிறார்?


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



*- ஜனனி*

## *பக்தராஜ் ஸ்ரீமானஸிம்ஹஜி*-6

பாபாவின் உன்மாத அவஸ்தை விலக ஆரம்பித்து விட்டது என உறவினர்கள் எண்ணலானார்கள். காணாமல் போய் திரும்பியதிலிருந்து, இன்னும் ஒரு முறை கூட அவர் பண்டித பாபாவின் ஸமாதியை சென்று ஸேவிக்கவில்லை. சுத்தமாக புது வஸ்திரம் அணிந்து, பாபாவின் ஸமாதிக்கு செல்ல எண்ணி, வஸ்திரம் கேட்பது போன்றவை, நல்ல மானஸீக தெளிவின் வெளிப்பாடாகவே அவர்கள் கருதினர். இனிமேல், தங்களது ஸேவைகளை அவர் ஏற்பாரோ என்ற ஆசையும் அவர்கள் மனதில் துளிர்த்தது. மதன்ஸிம்ஹ், அவர் கேட்ட ஸாமான்களை எல்லாம் வாங்கி வந்துவிட்டார். மதன்ஸிம்ஹிடம், புது வஸ்திரத்தை நனைத்து உலர்த்தியபின், மற்ற ஸாமான்களுடன், குடிலின் ஒரு அலமாரியில் வைத்து விடுமாறு கூறினார். அவரும் அவ்வாறே செய்தார். இதன்பின் அவர், உறவினர்களிடம் மீண்டும் மீண்டும், வீடு திரும்பி விடும்படி ஆக்ரஹம் செய்தார். மதன்ஸிம்ஹை தவிர்த்து, எல்லோரும் கிளம்பிவிட நினைத்தார்கள். ஆனால் மானஸிம்ஹ் அவரிடம், "அம்மாவும் சகோதரிகளும் தனியாக செல்வது சரியாகாது. நீயும் அவர்களுடன் செல்" என்று கூறிவிட்டார். மதன்ஸிம்ஹும் செல்லும்படி ஆயிற்று. அதனால் ரங்கீலா என்ற ஒரு வேலையாளை தூரத்திலிருந்து கண்காணிக்கும்படி நியமித்துவிட்டு, அவர்கள் எல்லோரும் சென்றுவிட்டார்கள்.

மாசி மாதத்தின் த்விதியை அன்று காலை, மானஸிம்ஹ்ஜி ஸ்ரீராதாவல்லபரை தரிசித்தார். யாரிடமிருந்தோ ஒரு சிறிய பானையில், தயிர் பெற்றுக்கொண்டார். ஒரிஸா பாபாவின் ஆஸ்ரமத்தில், ராஸலீலையை கண்டு களித்தார். பின் தாவானல குண்டத்தில் ஸ்நானம் செய்து, தயிரை உட்கொண்டார். பிஹாரிஜியின் தோட்டத்திற்கு திரும்பினார். அப்பொழுது ரங்கீலா அங்கு வந்தான். அவனிடம் மானஸிம்ஹ், "பாகவத நிவாஸ் எங்குள்ளது என்று அறிவாயா?" என்று கேட்டார். "தெரியாது. ஆனால் விசாரித்துக் கொண்டே போய்விடுவேன்" என்றான்.

"அப்படியானால் அங்கு செல். அங்கு க்ருபாஸிந்துதாஸ் பாபாவிடம், "பண்டித பாபாவை தரிசனம் செய்ய போகிறேன். அவரது பரஸாதத்தை ஸ்வீகரித்தபின், அவரது ப்ரஸாதமான ஒரு கண்டியையும் (கழுத்தில் அணியும் துளஸிமணிமாலை) அணிந்து வர விரும்புகிறேன். இரண்டையும், தயவு கூர்ந்து அளியுங்கள் என்று எனது சார்பாக கேள்" என்று கூறி அனுப்பினார். ரங்கீலா கிளம்ப தயாராகிவிட்டான். அச்சமயம், மானஸிம்ஹின் ஜன்மஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீரகுநாத தாஸ் பாபா அங்கு வந்தார். அவரிடம், "தாங்களும் ரங்கீலாவுடன் சென்றால் நல்லது. ஏனெனில், அவன் பாகவத நிவாஸ் எங்குள்ளது என்பதை அறியமாட்டான்" என்று கூறி, அவரையும் அனுப்பிவிட்டார். யாரும், தன்னுடன் இருப்பதை அவர் விரும்பவில்லை. ரங்கீலா, ரகுநாததாஸ் பாபாவுடன், பாகவத நிவாஸ் சென்று விட்டான். அச்சமயம், மானஸிம்ஹ், புது வேஷ்டியை உடுத்திக் கொண்டு, புது போர்வையை போர்த்திக்கொண்டு, நேராக பாயில் படுத்துவிட்டார். ரங்கீலா திரும்பியதும், அவர் இவ்வாறு கிடப்பதை கண்டு விக்கித்து நின்றான். அவரது கண்கள், மேல் நோக்கி குத்திட்டு நின்றிருந்தன. அது, அவர் யாரையோ எதிர்ப்பார்ப்பது போலிருந்தது. தனது ஏதோ ஒரு பரம ப்ரியமான ஒருவரின் வரவை தாங்காதது போல், அவரது கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. அருகிலேயே, அக்தரின் சிறிய குப்பியும் குலாலும் வைத்துக்கொண்டு, யாரையோ வரவேற்க ஸித்தமாக உள்ளதுபோல் காணப்பட்டார்.

"ராதே! ராதே! ப்ரஸாதம் எடுத்து வந்துள்ளேன்" என்று ரங்கீலா கூற, கண்களை சற்றும் சிமிட்டாமல், அதே போல் மேல் நோக்கி பார்த்தவாறே, கையை மட்டும் நீட்டினார் மானஸிம்ஹ். ரங்கீலா ப்ரஸாதத்தையும் கண்டியையும், அவர் கையில் கொடுத்தான். ப்ரஸாதத்தின் சிறு துண்டை வாயில் வைத்து கொண்டார். கண்டியை கழுத்தில் வைத்துக் கொண்டார். இதன் பொழுதெல்லாமும், அவர் பார்வை மேல் நோக்கியே இருந்தது. ரங்கீலா பயந்து ஓடிச்சென்று, அந்த தோட்டத்தில் வஸித்து வந்த சாஜூராம்ஜி என்பவரிடம், "பக்தஜியை சென்று பாருங்கள்! வேண்டுமானால் ஒரு டாக்டரையும் கூப்பிடுங்கள்" என்று பதட்டத்துடன் கூறினான்.

சாஜூராம்ஜியும் விரைந்து வந்து பார்த்தார். இந்த அவஸ்தையில், மானஸிம்ஹ்ஜிக்கு ஏதோ சரீர உபாதை என அவருக்கு தோன்றவில்லை. ரங்கீலாவை சற்று தூரம் அழைத்துச் சென்ற அவர், "அவர் த்யானத்தில் இருப்பது போல்தான் தெரிகிறது. வேறு பயமில்லை. நீ அவர் த்யானத்திற்கு விக்னம் செய்யாதே. சற்று விலகியிருந்து பார்த்துக்கொண்டிரு. தேவையானால் என்னை கூப்பிடு" என்று கூறினார். பின் தன் அறைக்குச் சென்றுவிட்டார். ரங்கீலா குடிலுக்கு திரும்பினான். அப்பொழுது, அவன் காதில் மானஸிம்ஹ்ஜி மெல்லிய குரலில், "ஜய் ஹோ" என்று கூறி யாரையோ நமஸ்கரித்து வரவேற்பது கேட்டது. குடிலுக்குள் நுழைந்து பார்த்தால், அங்கு அவர் பூத உடல் மட்டுமே இருந்தது. தன் ஸித்த ஸஹசரி உடலோடு, அவர் பண்டித பாபாவிடம் சென்றுவிட்டார். நிகுஞ்சத்தின் வண்ணமயமான ஹோலி உத்ஸவத்தின்பொழுது, தனது யுகளத்தின் ஸேவைக்காக, அக்தர் மற்றும் குலாலுடன், தனது மஞ்சரி ஸ்வரூபத்தில் அவர் திவ்யதாமத்தை அடைந்தார். (தொடரும்)

**love is eternal.....we build homes with love**

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

# *மாலே மணிவண்ணா - 140*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*பண்புடையார் பட்டு உண்டு உலகம் அது இன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்* என்பர் திருவள்ளுவரும்.

தன்னலம் கருதாமல், உலகநலம் கருதி வாழ்கின்ற நல்லோர்கள் உள்ளபடியால்தான் நாடு வாழ்கிறது என்பதை சிந்திக்க வேண்டும். கேள்வி என்பது வேதத்தை குறிக்கும் சொல். எழுத்தால் எழுத பெறாமல் காதால் வழிவழியாக கேட்கப்படுவதனால்தான் அப்பெயர் வந்துள்ளது. "சுருதி" என்பதும், இப்பொருளதே. எழுதாக்கிளவி என்பதும் வேதத்தை குறித்து எழுந்ததே.

ஒரு வேதம் கற்க, பன்னிரெண்டு வருடமாக, நான்கு வேதங்களும் கற்க, நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமச்சரியம் காத்தல் வேண்டும். இத்தகைய வேதபாதுகாப்பு செய்யும் அந்தணர்கள் மிக்கிருக்கிறபடியால், மதுரை நகர், அறத்திலிருந்து பிறழாமல் உள்ளது என்கிறார் ஆசிரியர்.

அறத்தில் திரியா பதி என்கின்ற அரிய சொல்வழக்கு, நினையும் தொறும் இன்பம் பயப்பது. பரிபாடலில் கிடைக்க பெறாத பாடலின் சில வரிகள், கிடைக்கப்பெற்று தமிழ்தாத்தா உ.வே.சா அவர்கள், தம் பரிபாடல் பதிப்பில் தந்திருக்கிறார்கள். அதில் ஒன்றை இங்கே காண்பது, பொருத்தமாக இருக்கும்.

*பூவினிற் பிறந்தோன் நாவினுள் பிறந்த*
*நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப*
*ஏம இந்துயில் எழுதல் அல்லதை*
*வாழிய வஞ்சியும் கோழியும் போலக்*
*கோழியின் எழாதெம் பேரூர் துயிலே*

திருமாலின் திருஉந்தித் தாமரை பூவில் தோன்றியவனாகிய, பிரம்மதேவனது நாக்கிலிருந்து பிறந்து நான்கு பகுதியாக மறைந்த பொருள் உடையதாக உள்ள,

வேதம் சந்தை சொல்கிற அந்தண சிறுவர்களது குரல் எழுப்ப, மதுரை நகரத்தில் உள்ளவர்கள், அந்த வேத ஒலி கேட்டுத்தான் வைகறையில் துயில் எழுவார்களாம்.

சேரர் தலை நகராகிய வஞ்சியும், சோழ அரசர்களது தலைநகராகிய கோழி எனப்பெறும் உறையூரும் போல கோழி கூவி எழுவதில்லையாம் மதுரை மக்கள், என்கிறது பரிபாடல். மதுரைக்கும் வேதத்துக்கும் உள்ள இந்த நீண்ட தொடர்பு, சங்ககாலம் தொட்டு குன்றாமல் இருந்திருக்கிறது என்பதை ஞான சம்பந்த பெருமான் அருளிய

*பொன்அழல் உருவன் பூத நாயகனால்*
*வேதமும் பொருள்களும் அருளி*
*அங்கையற்கண்ணி தன்னொடும் அமர்ந்த*
*ஆலவாய் ஆவதும் இதுவே* என்ற திருவாலவாய்த் திருப்பதிகமும் அறிவிக்கும். நகர சிறப்பு சொல்ல வந்தவர், ஒரு நகரின் தலையாய சிறப்பு அந்நகரில் வேதம் வீற்றிருப்பதுதான் என்பதை முதற்கண் கூறி, பின்னர், நம்மை நகரினுள் அழைத்து செல்கிறார். (தொடரும்)

## சனாதனப்புதிர் பகுதி 74 - விடைகள் -ஆத்ரேயன்

1. ஸ்ரீமத் பகவத் கீதை - ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம்.
2. காசி கண்டம்; கங்கா ஸஹஸ்ர நாமம்.
3. **100** அத்தியாயங்கள்; **11706** ஸ்லோகங்கள்.
4. குஹன் அகத்திய முனிவருக்கு சொல்வதாக அமைந்திருக்கிறது.
5. பார்கவ புராணம்.
6. கும்பகோணம் நாகேஸ்வரர் ஆலயம் - கங்கை விநாயகர்.
7. திருவலஞ்சுழி - வலஞ்சுழி விநாயகர்.
8. லிங்க புராணம், சிவ புராணம், வராஹ புராணம், ஸ்காந்த புராணம், பிரஹ்மாண்ட புராணம்.
9. ப்ருகு-புலோமா; ச்யவனர்-சுகன்யா; ப்ரமதி - க்ருதாசி; ருரு - ப்ரமத்வரா.
10. **6**ஸ்லோகங்களில்.

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | ஜூன் 12, 28 ஜீலை 12, 27 |
| ஜூன் 3 | பாண்டி அருகில் - மடிக்ருஷ்ணாபுரம் - முள்ளோரை சந்திப்பு பட்டாபிராமர் கோவில் கும்பாபிஷேகம் |
| ஜூன் 12 | ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் ஆண்டு விழா |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**